# காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில்
# ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்




''ஆடல் அழகனை ஆதாரமாகக் கொண்டமைந்த சைவம்''

**ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான தங்கக் கலசத்துடன்**
**அமைந்த அழகிய சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர் பற்றிய**
**ஒரு கண்ணோட்டம்**

விமர்சகர்:
அருட்கலை மாமணி, சித்தாந்த பண்டிதர்
வாசீக கலாநிதி, திருமுறைக்கலாநிதி
**நயினை கனகசபாபதி நாகேஸ்வரன், MA**
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம், இலங்கை

வெளியீடு:
கொழும்பு இந்து இளைஞர் மன்றம்
**YMBA - Colombo**

உ

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இந்து இளைஞர் மன்றம் - கொழும்பு

YOUNG MEN'S ASSOCIATION - COLOMBO

තරුණ හින්දු සංගමය - කොළඹ

Reg. No. HA/4/C/54
Bank A/C. 3268616

No: 4, Ramakrishna Garden,
Colombo - 6.
Telophone: 2731587
Email: ymhacolombo@yahoo.com


# கொழும்பு இந்து இளைஞர் மன்றம் பெருமையடைகிறது

காரைநகர் ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான தங்கக்கலசத்துடன் கூடிய சிறப்பத்தேர் வெள்ளோட்ட மலரின் கண்ணோட்டத்தை வெளியிட்டுவைப்பதில் எமது கொழும்பு இந்து இளைஞர் மன்றம் பெருமையடைகிறது.

இந்த மலரின் ஆசிரியராக இருந்து பெருமைக்குரிய இந்த மலரை சைவஉலகுக்குத் தந்த சிவனடியார் கே.கே. சுப்பிரமணியம் அவர்களுக்கு அந்த சைவ உலகம் சார்பாகவே எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். ஈழத்துச் சிதம்பரம் என்றவுடன் இன்று எமது கண்களுக்கும், செவிகளுக்கும் முன்பாக நிற்பவர் கே.கே. அவர்கள். சிதம்பரம் என்றால் கே.கே., கே.கே. என்றால் சிதம்பரம் எனும் அளவிற்கு அந்த ஆடல் அழகனின் புகழை, பெருமையை, சிறப்பை சுமார் அரைநூற்றாண்டுக்கும் மேலாகப் பரப்பி, எடுத்துக்கூறும் அரிய நல்ல ஆன்மீகப் பணியில் கே.கே. அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

அவரது சமய, சமூக, ஆன்மீக பணிகளுக்கு அவர்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கிடைத்துவரும் கௌரவங்களும், பட்டமளிப்புகளும் சான்றுபகரும். குறிப்பாக தமிழக ஆதீனங்கள் அனைத்துமே இவரைக் கௌரவித்து, பாராட்டி, ஆசிகளையும் வழங்கியுள்ளன. அவர்தம் பணி தொடர நாமும் வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிறப்பான இம்மலரை வெளியிட அவருடன் பக்கபலமாக நின்ற முன்னாள் இந்துசமய அமைச்சர் இறைபணிச்செம்மல் திரு.தி.மகேஸ்வரன் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகளும், பாராட்டுக்களும் என்றும் உண்டு.

**த.செந்தூரன்**
செயலாளர்

**தே. செந்தில்வேலவர்**
தலைவர்


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
ஸ்ரீ லஸ்ரீ சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்: 04364 - 232021




நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

## அருள் வாழ்த்துரை

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறிவிச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே

*அப்பர் தேவாரம்*

காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் மூலம் வெளியிடப்பெற்ற சிறப்பத்தேர் வெள்ளோட்ட மலரினைப் பார்வையிட்டு மகிழ்வுற்றோம்.

ஆடல்வல்லானின் திருமேனி தத்துவம் குறித்த விளக்கக் கட்டுரைகளும், கண்கவர் வண்ணப்படங்களும் மலரின் தோரணவாயிலாக அமைந்து அணி செய்கின்றன. திருத்தல மகிமை குறித்த கட்டுரைகள மிகவும் அவசியமான - வையாகும். அன்பர்கள் வழிபாட்டு நெறியில் ஊக்குவிக்கும் முறையில் இக் கட்டுரைகள் விளங்குதல் பாராட்டுக்குரியது. திருத்தேர் குறித்த விளக்கக் கட்டுரைகளை வழங்கியிருப்பது அரிய முயற்சியாகும். குறிப்பாக உத்தர காரணாகமத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியிருத்தல் சிறப்பாக உள்ளது. மேற்கொண்டு சிவநெறி விளக்கமாக அமைந்துள்ள பொதுக் கட்டுரைகள் மலருக்கு நிறைவான நிலையைத் தருகின்றன.

பல்வேறு நூல்களில் இருந்தும் அரிய பல கருத்துக்களைத் திரட்டித் தருகின்ற பெரும்பயன் விளைக்கும் செய்கையைச் செய்வதே விழா மலர்களுக்குச் சிறப்பாகும். அச்சிறப்பினை இம்மலர் நன்முறையில் சாதித்துப் பெற்றுள்ளது என்பது தெளிவு.

இந்தச் சிற்பத்தேர் வெள்ளோட்ட மலரால் பல்லோரும் பயன்பெறவும். இதுபோன்ற சிறந்த மலர்கள் மேலும் உருவாகிச் சிவநெறி தழைத்துச் சிறந்திடவும், வேண்டி நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

**பெறுநர்: திரு.கே.கே.சுப்பிரமணியன்,**
**இலங்கை.**

. . . . . . . . . . . . . . .

# மலர் ஆசிரியர்க்கு ஆதீனங்கள் வாழ்த்து

சிற்பத்தேர் வெள்ளோட்ட தெய்வீக மலர் இந்தியா, கனடா, லண்டன், மலேசியா, சுவிஸ், அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளிலுள்ள சைவ மக்களுக்கும் சிறப்பாக வழங்கப்பட்டது.

காஞ்சி காமகோடிகள் பீடம், சற்குரு ஸ்ரீ ஞானானந்த பீடம் உட்பட தமிழகத்திலுள்ள ஆதீனங்கள், சிதம்பர தீட்சகர்கள், அறிஞர்கள் ஆகியோருக்கும் இம்மலரின் விசேட பிரதிகளை மலரின் ஆசிரியர் சிவநெறிச் செல்வர் கே.கே.சுப்பிரமணியம் தனது பாரியார் சரஸ்வதி அம்மா சகிதம் நேரடியாகவே சென்று பார்வைக்கு வைத்து வழங்கினார்கள்.

காஞ்சி சங்கரமடம் உட்பட பல ஆதீனங்கள் கே.கே.யின் அரும்பணியைப் பாராட்டி ஆசீர்வதித்து அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவம் செய்தார்கள். சைவ உலகுக்குக் கிடைத்த அருமையான இரு பொக்கிஷங்கள் என அவரையும், மலரையும் ஆதீனங்களும், தீட்சகர்களும் பாராட்டினார்கள்.



உ
சிவ சிவ

கயிலை மாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்.

Ph: 56655
திருப்பனந்தாள் - 612 504
(தஞ்சை மாவட்டம்)
தேதி ______

திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்கட்குச் செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க.

ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான ''சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர்'' பார்வையிடலாயிற்று. கூத்தப்பிரான திருவடிகட்குச் சமர்ப்பிக்கப்பட்ட இம்மலர் சிறப்புடன் அமைந்துள்ளது. ஈழத்துச் சிதம்பரம் பற்றிய விவரங்கள் யாவும் இம்மலரில் அடங்கியுள்ளன. தலம் பற்றிய நூல்களின் தொகுப்பு பயனுடையதாகும்.

திருத்தேர் பற்றியும், தேர்த்திருவிழா பற்றியும், ரதத்தின் மகத்துவம் பற்றியும், ரதப்பிரதிஷ்டை செய்வது பற்றி உத்தரகாரணாகமத்தை அடிப்படையாகக் கொண்ட விவரமும், சித்திரைத்தேர்கள் தோன்றிய வரலாறு பற்றியும் மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் பல புதிய செய்திகளைத் தாங்கிப் பயனுடையதாகவும் அமைந்துள்ளமை சிறப்பு. ஆன்மீகக் கட்டுரைகள் பலரை ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளன. எடுத்த பாதம் பற்றிய திரு அருணை வடிவேல் முதலியார் அவர்கள் கட்டுரையும், தாண்டவங்கள் பற்றிய திரு.ச.தண்டபாணி தேசிகர் அவர்கள் கட்டுரையும் மிகச்சிறப்பு.

அறுபத்துமூவர் பற்றிய சுருக்கமான தொகுப்பு சைவ அன்பர்க்கு மிகவும் பயனுடையதாக விளங்கும். பாவை பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றமை மேலும் சிறப்பு. பாவைக் கட்டுரைகள் சிறப்பாக உள்ளன.

அரிதின் முயன்று இம்மலரை உருவாக்கிய அன்பர்கள் பாராட்டுக்குரியவர். மலர்க்குழுவினரும், விழாக்குழுவினரும், மலரைப் படித்துப் பயன்பெறும் அன்பர்களும் சிவானமும் தீர்க்காயுளும் மேம்மேலும் பெற்று வாழத் திருவருள் புரியுமாறு செந்திலாண்டவன் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

திரு.கே.கே.சுப்பிரமணியன்,
ஸ்ரீலங்கா.

# முதறிஞர் வைத்தீஸ்வரர் ஐயா வாழ்த்துகிறார்

காரைநகரும், அதன் உயிர்நாடியுமான எமது ஈழத்துச் சிதம்பரமும், அழகிய கிராமமும் இன்று சிறந்த பல முன்னேற்றங்களைக் கண்டுவருகின்றன. புலம்பெயர்ந்த எமது கிராம மக்கள் ஆற்றிவரும் தொண்டுகள் பற்பல.

எமது ஆலயம், கல்விக் கூடங்கள், கிராம வைத்தியசாலை உட்பட பல நிறுவனங்கள் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. கி.பி. 1776ஆம் ஆண்டுக்கு முன்னர் அமைக்கப் பெற்ற எமது ஈழத்துத் தொன்மையான சிவாலயமான ''ஈழத்துச் சிதம்பரம்" அருமையும், பெருமையும் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து வருகிறது.

ஆலய பரம்பரை ஆதீன கர்த்தாக்கள் தமது முன்னோரைப் பின்பற்றி அரும்பெரும் தொண்டுகளை ஆற்றிவருகின்றனர். அந்த வகையில் திருவாளர்கள் ஆ. அம்பலவிமுருகன், து. சுந்தரலிங்கம் ஆகியோர் முழு சைவ உலகாலும் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

தொன்மை வாய்ந்த எமது சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் புகழை உலகமெங்கும் பரப்பி அவருக்கு தங்கக் கலசத்துடன் கூடிய சிற்பத்தேரை அமைத்து பெருமைசேர்த்த முன்னாள் இந்துசமய கலாசார அமைச்சர் திரு. தி. மகேஸ்வரனுக்கும், சுங்கத் திணைக்கள முன்னாள் சிரேஷ்ட ஆணையாளர் அறநெறிச்செல்வர் கே.கே.சுப்பிரமணியம் அவர்களுக்கும் சைவ உலகம் நன்றி கூறும் என்பதில் ஐயமில்லை.

**முதறிஞர் சிவஸ்ரீ. க. வைத்தீஸ்வரக்குருக்கள்,**
**காரைநகர்.**



**ஈழத்துச் சிதம்பரத்தில் தைப்பூசத்தன்று கால்கோள் விழா நிகழ்வின்போது.... (25.01.2005)**



# சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர் கண்ணோட்டம்

## காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில் ஈழத்துச் சிதம்பர வேஸ்தானம் சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர்

'கோயில்' என்றால் சிதம்பரம், அது ஆகாயத் தலம். 'பரவெளிமண்டலம்' என்று சைவசித்தாந்தம் கூறும். காற்றின் நிலைக்களம், பிறப்பிடம். 'வளி'யாகிய காற்றின் செயற்பாட்டினாலேயே 'உயிர்' வர்க்கங்கள் சீவிக்கின்றன. விண்ணுக்கும் மண்ணுக்கும் அத்யந்தத் தொர்புண்டு. ஆதலால் சிதம்பரத்திற்கும் உலகுயிர்களுக்கும் அநாதியே தொடர்பும், பிணைப்பும், ஈர்ப்பும், சம்பந்தமும் என்றென்றுமுண்டு. தில்லை, சிதம்பரம் எனப்படும் தத்துவம் அரன், அரி, சிவை (சக்தி), கலை, தெய்வீகம், யாகம், யோகம், ஹோமம், ஆகமம், வேதம், இரகசியம், திருமுறை என்னும் அம்சங்களையும் இன்னும்பல அற்புதங்களையும் அதிசயங்களையும் கொண்டமையும் இடமாயுள்ளமை காணத்தக்கது. சிதம்பரத்தின் அதியுன்னதம் சிற்சபையிலே, கனகசபையின் கண் நிகழும் நடராசதாண்டவம். தூக்கிய திருவடியுடன் நிகழும் 'நடராஜ தாண்டவம் உலகப்பேரதிசயம். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் பஞ்சகிருத்தியால் களையும் சிதம்பர சபாநாயகர் நடேசராயிருந்து நிகழ்த்துகிறார் என்பது நம்பிக்கை. சக்தி, ஆதிபராசக்தியான சிவகாமசுந்தரியென்னும் திருநாமத்துடன் சிவனையே காமிப்பவளாக நின்று நல்லறங்களை வளர்த்து உலகைப் புரக்கிறாள்: காத்திருக்கிறாள். ஈழத்துச் சிதம்பரத்திலே சௌந்தராம்பிகை என்னும் பெயருடன் உறைகிறாள். அப்பனும் அம்மையுமாயிருந்து சிவனும் சக்தியும் உலகை வழிப்படுத்தும் தத்துவத்தைக் கொண்ட தலம் தில்லையேயாகும். சிதம்பரத்திற்குக் கோயில், தில்லையெனும் மறுபெயர்களுமுள. தில்லைச்சிற்றம்பலவன், தில்லைக் கூத்தன், தில்லைச்சிவன், தில்லைநடராசன், தில்லையம்பல நடராசன், தில்லைப் பொன்னம்பலவன், சிதம்பரநாதன், சிதம்பரேசன், சிவகாமிநேசன், ஆடலிறை, அம்பலத்தாடி, அனவரததாண்டவன், அழலாடி, அங்கையிலைலேந்தி, அம்பலக் கூத்தன், ஆடியபாதன், அற்புதக்கூத்தன், நள்ளிருளில்நட்டம் பயின்றாடு(ம்) நாதன், சிதம்பரநடேசன் என்றெல்லாம் அழைக்கப்படுபவன் சிவன். 'சிவநடனம்' 'சிவதாண்டவம்' எனவும் அழைக்கப்படும். கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி 'The Dance of siva' என்று அரிய நூல் ஒன்றை எழுதினார்.

இலண்டனிலுள்ள அரும்பொருளகக் காட்சிச்சாலையில் (Museum) நடேசரின் சிவதாண்டவச் சிலை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடற்பாலது. அதாவது கீழைத்தேயச் 'சிவவழிபாடு' மேலைத்தேயத்தில் பொருளுணர்ந்து, உண்மையறிந்து போற்றுத் திறன் உலகைக் காப்பது: சிவவழிபாட்டையும் அதன் பேருண்மை அர்த்தத்தையும் என்றென்றும் பரப்புவது. மேலும் சிவதத்துவம், நடராஜ தாண்டவம் முழுவதும் விஞ்ஞான உண்மை என்பதால் அது எல்லோராலும் எவ்வுலகத் தாராலும் போற்றப்படத் தக்கது. அதுமட்டுமன்றிச் 'சிவாகமமரபு' உலகநியதி

யாகையால் என்றென்றும் நம்பகத்தன்மையும், உண்மையறிவனுபவமும், உயிர்ப்புங் கொண்டவை. இவற்றினால் உலகம் உள்ளளவும் 'அழியாததன்மை' 'ஒடுங்காத நிலை' சைவசமய நெறிக்கு மட்டுமே உள்ளதாகும். ஏனெனில் 'சைவசமய நெறி தானே சுயம்புவாய்த் தோன்றியது. அது தோற்றுவிக்கப்பட்டவொன்றதல்ல. இயற்கையானது மட்டுமென்றிச் 'சிவன்' என்னும் பெருங்கடவுள் 'இயற்கையதீதமானவன்' என்பதால் ஈறில்லாதது: முடிவற்றது. இலங்கையிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களுடன் தவமுனிவர்களதும் ஆன்மஞானிகளதும் அநுபூதிச் சிறப்புடனும் வெகு கீர்த்தியுடனும் அருட்சிறப்புடனும் கீர்த்தியுடனும் திகழ்வான காரைநகரிலுள்ள ஈழத்துச்சிதம்பரம் என்னும் திருத்தலமும் காரைநகர் சிவன் கோயில், திண்ணபுரம் சிவன்கோயில், ஈழத்துச் சிதம்பரம் என்ற மூன்று பெயர்களாலும் சிறப்பிக்கப்படுவது சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் திருக்கோயிலாகும். இக்கோயிலின் பூர்விக வரலாறு, அற்புதங்களும், திருப்பண்களும், தங்ககலசத்துடன் புதிய சிற்பத்தேர் நிர்மாணமும் குறித்த செய்திகளை இனிநோக்குவோம்.

காரைநகர் புண்ணியபூமி. அனைத்து வளங்களும் கொண்ட தனித்துவமான மண். கல்விச் சிறப்பும், கலைச்சிறப்பும், வணிகச் சிறப்பும், வள்ளண்மைச் சிறப்பும், மருதவயற் சிறப்புங் கொண்ட ஊராகும். விழாமகிமையும், பக்திப் பண்பாகும். கலாரசனையும், கல்விச் சிறப்புங் கொண்ட மக்கள் வாழும் ஊராகும். அனைத்துத் தெய்வங்களுக்கும் திருக்கோயில்களமைத்து வழிபடும் சிறப்புடையது காரைநகர். காலத்திற்குக் காலம் தாம் வழிபடும் ஆலயங்களின் தோற்றச் சிறப்புகளையும், திருப்பணி முதலியன நடைபெற்றுவரும் தலவரலாறுகளையும், இறைவன் திருவிளையாடல்களையும், பக்திப் பண்பாட்டு வளர்ச்சியையும் மக்கள் இயன்றவரை அறிந்திருத்தல் அவசியமாகும். வழிபாட்டிலே ஊக்கமும் அன்பும் மேன்மேலும் பெருகுதற்கும் சிறப்புறுவதற்கும் சிறப்புமலர்களும், புராணங்களும், மான்மியங்களும், காவியங்களும், நூல்களும் வெளியிடப்படுவது பெருநன்மை தரும் சிவபுண்ணியச் செலவாகும்.

## ஈழத்துத் தொன்மையான காரைநகர் சிவன் கோயில் - ஈழத்துச் சிதம்பரம்

காரைநகர், திண்ணபுரம் ஸ்ரீ சுந்தரேசுவரர் தேவஸ்தானம் என்பது ஈழத்துச் சிதம்பரம் என்றும் அழைக்கப்படும். தேவஸ்தான பரம்பரை ஆதீன கர்த்தாக்கள் அ.ஆண்டி ஐயா, து.முருகேசு, ஆ.அம்பலவி முருகன், மு.சுந்தரலிங்கம் சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்கள் ஐயா, திண்ணபுரம் ஸ்ரீ சுந்தரேசுவரர் தேவஸ்தானத்தின் வரலாற்றை எழுதிய சான்றோன். திண்ணபுர அந்தாதியை இயற்றியவர் அறிஞர் திலகம் பிரம்மஸ்ரீ கார்த்திகேயப் புலவர். காரைநகரிலே 'மணிவாசகர் சபை' அமைத்து இன்றுவரை போஷகராயிருந்து பெரும் சமயப்பணிபுரிபவர் கலாநிதி பண்டிதமணி சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்கள்.

காலத்திற்குக் காலம் சைவப் பேரறிஞர்கள், பேராசிரியர்கள், ஆதீனத்தின் சுவாமிகள், கலாநிதிகள் என்றோரையும், கதாப்பிரசங்கம் செய்யவல்ல



விற்பன்னர்களையும் அழைப்பித்து விழாவெடுக்கும் தீவகமக்கட் பண்பாட்டின் சிகரமெனத் திகழ்வது காரைநகரேயாகும். தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப் பட்டுவரும் தீவக மக்களது இப் பண்புகளே இன்று யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும், அதற்கு வெளியிலும், முழு இலங்கையிலும், அதற்கப்பாலும் உலகின் பல பாகங்களிலும் செறிவு பெற்றுத் தமிழர் கலாசாரமாக உருவெடுத்துள்ளமை கண்டின்புறத்தக்கது. குறிப்பாக, சமயநெறி, இலக்கியம், பக்தி, என்னுந் துறைகளிலும் நாதஸ்வர, தவில் மங்கள இசைக் கச்சேரிகள், பண்ணிசைக் கச்சேரிகள் கர்நாடக இசை நிகழ்ச்சிகள் என்பனவற்றையும் நிகழ்த்துவிப்பதில் பேரீடுபாடு கொண்டவர்கள் காரைநகர் மக்கள். இப்பண்பாட்டுப் பேணுகையின் உயிர்ப்பாயும், உறுதுணையாளர்களையும் விளங்குபவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தியாகராசா மகேஸ்வரன் எம்.பி. அவர்களும், 'பரோபகார மணி' கே.கே.சுப்பிரமணியம் அவர்களுமாவர்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்குப் பல இலட்சம் ரூபா திருப்பணியிலே திருத்தேர் செய்வித்து உபகரித்தவர் ஸ்ரீமான் தியாகராசா மகேஸ்வரன் அவர்கள். அமைச்சராக இருந்தவேளை அகில உலக இந்துமகாநாட்டை இலங்கையில் நடத்துவித்த பெருமை இவரையே சாரும். மாநாடு தொடர்பான பெறுமதிவாய்ந்த மலர்கள் ஆங்கில மொழியிலும், தமிழிலும் வெளியிடப்பட்டுள்ள மாண்பு பெரிதும் பாராட்டத்தக்கது. திரு. தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் முன்முயற்சியுடனேயே திண்ணபுரம் சிவன்கோயிலின் திருத்தேர்த் திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டதென்ற செய்தி இனிப்பான உவகை தருஞ் செயதியாகும். துடிப்பும், நுண்மதியும் தெய்வநம்பிக்கையும், பக்தியும், பண்பாடும் கொண்ட தியாகராசா மகேஸ்வரன் அவர்களது பெரும் திருப்பணிகள் வரலாற்றின் தடயங்களாகும். இளமையும், வளமையும் கொண்ட இவரது பெரும் பணிகள் இன்றும் தமிழர் சமுதாயத்திற்கு இயன்ற வண்ணமே உள்ளது. பொது நலநோக்கும், சீலமும், செயலாண்மையும் கொண்ட கௌரவ தி. மகேஸ்வரன் அவர்களது சமய, சமூகப் பணிகள் மேன்மேலும் வெல்வதாகுக. அவர் அமைச்சராக இருந்த காலத்தில் திருக்கேதீசுவர மகா கும்பாபிஷேகத்தை நடத்திய மகான்.

'குருபக்தசிரோமணி', 'பரோபகாரமணி', 'சைவத்திருத்தொண்டர்', 'கலாரசிகமணி', 'அருள்நெறித்தொண்டர்', 'சிவதர்மசுரபி', 'சிவநெறிக்காவலர்', 'சாமஸ்ரீ கனகஜோதி', 'சிவநெறிச்செல்வர்', 'ரசிக கலாமணி' ஆகிய சிறப்புப் பட்டங்கள் பலவற்றைப் பெற்றுக்கொண்ட கே.கே.சுப்பிரமணியம் அவர்கள் 1929-10-16ஆந் திகதியன்று சிவபூசைச் செல்வர் கந்தப்பு அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். புகழுக்குரிய சைவக் குடியிற் பிறந்தமையாற் போலும் சைவசமய, ஆன்மிகச் சார்பான நூல்கள் பலவற்றை வெளியீடு செய்துள்ளார்.

1. பிரசாந்தி நிலையம் அழைக்கிறது.
2. தில்லைக் கூத்தன் திருவிளையாடல்.
3. சுவாமி ஹரிதாஸ்கிரி குருஜி.
4. ஈழத்துச் சிதம்பர வரலாற்றுச் சுருக்கம்.
5. யாழ்மண் தந்த கலைஞர்கள்
6. காரை ஒளி
7. மணற்காட்டு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கும்பாபிஷேகமலர்.

8. ஈழத்துச் சிதம்பர கும்பாபிஷேக மலர்
9. சிவஸ்ரீ க.வைத்தீசுவரக் குருக்கள் மலர்
10. காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானம் சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர்

என்பன கே.கே.சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்டவையாகும்.

உளமகிழ்வும், சமய ஈடுபாடும், சமூகப்பற்றும், கலாரசனையும், பூசை வழிபாடுகளில் தம்மையும் ஈடுபாடுகொள்ளச் செய்து அனுபவிக்கும் பாங்கும், பரோபகார சிந்தையும், நேசிப்புத்திறனும், மொழிப்பற்றுங்கொண்டவர் கே.கே.சுப்பிரமணிம் அவர்கள். சிற்பத்தேர் தங்ககலசம் 10-01-2006 வைத்து, மேலும் வெள்ளோட்டம் அன்று சிற்பத்தேரில் வீதிஉலாவும் வந்தார்.

இப்பொழுது அரிய முயற்சிகள் எடுத்து ''ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான சிற்பத்தேர் வெள்ளளோட்ட மலர்'' என்னும் அரியதோர் சிறப்புமலரை வெளியிட்டுள்ளார். இச்சிறப்பு மலரின் அமைப்பும் அதிலிடம் பெற்றுள்ள ஆசிகளும், கட்டுரைகளும் , பிற கருத்துக்களும், படங்களும் எல்லாம் திண்ணபுரத்தின் பூர்விகத்தையும் அங்கு நடைபெற்றுள்ள திருப்பணிகள் பற்றியும் புதிய சிற்பத் திருத்தேரின் அரிய சிறப்புகள் பற்றியும் விளக்கி விவரிப்பனவாயுள்ளன.

மலராசிரியர் கே.கே.சுப்பிரமணியம் அவர்கள் சுங்கத் திணைக்களத்திலேயே உதவி ஆணையாளராக நாற்பது ஆண்டுகள் உயர்பதவி வகித்தவர். கலைஞர்களை ஆதரிக்கும் பண்பாளர். தொண்டுள்ளங்கொண்ட சீலர். இவர் இயல்பிலேயே கலைஞர்களையும், கல்விமான்களையும், சொற்பொழிவாளர்களையும், அந்தணர்களையும், பேராசிரியர்களையும், தம்முரவர்களையும் அன்பு காட்டி நேசித்துப் பழகும் குணத்தினர். அண்மையிலே தமிழகத்தில் சுவாமி ஹரிதாஸ்கிரி, ஏ.கே.சி.நடராஜன், தவில்வித்துவான் ஹரித்துவார மங்கலம் பழநிவேலு போன்றோரால் திரு.கே.கே.சுப்பிரமணியம் அவர்களுக்கும் அவர்தம் பாரியார் ஸ்ரீமதி சஸ்வதி சுப்பிரமணியமும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் தென்னாங்கூர் தக்ஷணைகையலாய ஆச்சிரமத்தில் சற்குரு ஸ்ரீ ஞானானந்த சுவாமிகளின் ஆருத்ரா பௌர்ணமி ஆராதனை விழாவில் 'குருபக்தசிரோமணி' விருது வழங்கப்பட்டது. ஞானானந்த சமாஜத்தின் சுவாமி நாமானந்தகிரி நூலாசிரியர் கே.கே.சுப்பிரமணியம் அவர்களுக்கு விருதினை வழங்கினார்.

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் பரிபூரண அருளாசிகளைப் பெற்று வாழ்பவர் ஸ்ரீமான் கே.கே.சுப்பிரமணியம் குடும்பத்தினர். இத்தகு புனிதங்களால் பெரும்பாலோரால் அறியப்படுபவர் திரு.கே.கே.சுப்பிரமணியம். இத்தகு வெகுஜன மதிப்பும், தொடர்பும் தரமிக்கதோர் வெள்ளோட்டச் சிறப்புமலைக் குறுகியகால எல்லையில் வெளியிட ஏதுவாயிற்று. 'ஈழத்துச்சிதம்பரம்' 'ஈழத்துச்சிதம்பரம்' என்று எடுத்ததற்கெல்லாம் உச்சரிக்கும் உத்தமர் கே.கே.சுப்பிரமணிமயம் அவர்கள். இன்றும் எம்முடன் வாழ்ந்துவரும் பிரபல தொழிலதிபர், அறங்காவலர் ஸ்ரீமான் வி.ரி.வி.தெய்வநாயகம் அவர்கள் எடுத்ததற்கெல்லாம் 'முருகா' என்று திடமாய்ச் சொல்லுவது போலவே கே.கே.சுப்பிரமணியமும் 'ஈழத்துச்சிதம்பரம்' என்று வாய்குளிரச சொல்லுவார்கள். அத்தலப் பெருமையை அறிவதும் அவசியமாகும்.



அம்பலவி முருகர் என்னும் சைவநல்லார் முன்பு ஐயனார் கோயிலாக இருந்த காலத்தும் அதைப் பஞ்சபூதங்களில் ஒன்றாகிய சிதம்பரமாகச் சிந்தையில் வளர்த்தமையால் திருவாதிரை, பங்குனி உத்தரம், ஆடிப்பூரம் முதலிய நாட்களில் விழா எழுத்துக் கொண்டாடியிருக்கின்றார். பஞ்சரத பவனியும் ஆண்டுக்கு மூன்று முறை நடைபெறும்.

ஈழத்துச் சிதம்பரத்தின் சுவாமி பெயர் சுந்தரேஸ்வரர்: அம்பாள் பெயர் சௌந்தராம்பிகை. தலவிருட்சங்கள் அரசு, வன்னி, இருப்பை. தீர்த்தங்கள் பரமானந்த கூபம், சித்தாமிர்தவாவி, துர்வாசசாகரம் என்பன. 1848, 1903, 1934, 1950ஆம் ஆண்டுகளில் சுந்தரேசுரப் பெருமானுக்குக் கும்பாபிஷேங்கள் நடந்தேறின. (ஆதாரம் - ஈழத்துச் சிதம்பரம், க.கணபதீஸ்வரக் குருக்கள், ப.45).

காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் - ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் சிற்பத்தேர் வெள்ளோட்ட மலர் (10-01-2006) கொழும்பு யுனிஆட்ஸ் அச்சகத்தில் வடிவமைக்கப்பட்டுப் பதிக்கப்பட்டுள்ளது. மலரிலே பொருளடக்கமாக இடம்பெற்றுள்ள அம்சங்கள் மேல் வருமாறு

கூத்தப்பிரான் திருவடிகட்கு இம்மலர் சமர்ப்பணம் எனத்தொடங்கி மகாவித்தவான் சிவத்திரு சி.அருணைவடிவேலு முதலியார் எழுதிய (சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட) 'எடுத்தபாதம்' என்னுந் தலைப்பிலான கட்டுரை, 23 ஞான சிரேஷ்டர்களது அருளுரைகள் முறையே,

காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், திருவாடுதுறை சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள், நல்லையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள், திருப்பனந்தாள் திருவாளர் திரு. காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், நாமானந்தகிரி சுவாமிகள், சுவாமி ஆத்மகனானந்த மகராஜ், சிவஸ்ரீ க.வைத்தீசுவரக் குருக்கள், சிவப்பிரம்மஸ்ரீ வி.ஈஸ்வரக் குருக்கள், ஆதீனகர்த்தாக்கள் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P. கௌரவ தியாகராஜா மகேஸ்வரன் பா.உ, டி.எம்.சுவாமிநாதன், திருவாளர்கள் வ.செல்லத்துரை, நா.சீவரத்தினம், க.தில்லையம்பலம், க.சிவபாலன், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், சரவணமுத்து, ஜெயகாந்தன், ந.கனகரட்ணம், சி.சரவணபவன், வை.கா. சிற்றம்பலவாணர், கே.எஸ்.சிவஞானராசா (இசை ஆசிரியர்) ஆகியோர் எழுதியவையாக இடம்பெற்றுள்ளன.

இச்சிறப்பு மலரிலே,
'திருத்தலம்',
'திருத்தேர்',
'திருநெறி' பற்றியவையென்னும் முப்பெரும்பிரிவில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

1. அன்றொரு நாள் ஈழத்துச சிதமபரத்தில்....
2. கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் வழிபட்டதலம் ஈழத்துச்சிதம்பரம்
3. வீடுபேறு தரும் ஈழத்துச் சிதம்பரம்
4. ஒட்டிப்பிறவா இரட்டையர்கள்

என்னும் நான்கு கட்டுரைகள் 'திருத்தலம்' பிரிவில் இடம்பெற்றுள்ளன.

'திருத்தேர்' தொடர்பான பகுதியில் 12 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவை மேல்வருவன:

1. ஈழத்துச் சிதம்பரம்
2. தேர்த்திருவிழா இறைவனுக்குரிய ராஜோபசாரம்
3. மாநகரமும் கோயிலும் ரதத்தின் மகத்துவமும்
4. இரதோற்சவம்
5. சிவாலயக் கிரியை மரபில் ரதப்பிரதிஷ்டை (உத்தரகாரணாகமத்தை அடிப்படையாகக் கொண்ட குறிப்புகள்)
6. நல்விழாப்பொலிவு காணல்
7. சித்திரத்தேரேறித் திருவீதி வலம்வரும் திண்புரத்தான் பாதம் போற்றி
8. காரை ஈழத்துச்சிதம்பர மார்கழித் திருவாதிரை இரதோற்சவம்
9. ஆடல் வல்லானுக்கு அணியுடை ஆதிரைத்தேர்
10. ஈழவள நாட்டின் இணையற்ற திருவிழா
11. சைவ உலகில் வேறு ஒரு சைவ ஆலயங்களிலும் இல்லாதவாறு எல்லாம் அமைத்த சிரேஸ்தபதி - ஒரு நேர்காணல்
12. செல்வச்சந்நிதி ஆலயச் சித்திரத்தேர்கள் தோன்றிய வரலாறு

என்னுங் கட்டுரைகள் உள்ளன. 'திருநெறி' என்னும் பகுதியலமைத்துள்ள 10 கட்டுரைகளும் மேல்வருமாறு:

1. ஆடல் வல்லானின் சப்த தாண்டவங்கள், நவதாண்டவங்கள்.
2. அறுபத்து மூவர் திருநட்ஷத்திரங்களும் தொண்டுகளும்
3. மார்கழி நீராடல்
4. மார்கழித் திருவெம்பாவை மகிமை
5. தவநெறி
6. ஒன்றியிருந்து நினைமின்கள்
7. இந்துமதம் - சனாதன தர்மம்
8. கோமாதா குலங்காப்போம்
9. மார்கழித் திருவாதிரை
10. திருத்தேர்த்திருப்பணிக்கு உதவியளித்த உதவியாளர்கள்

என்னும் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## கருத்துக் கருவூலங்கள்:

திருவாடுதுறை ஆதீனகர்த்தர் சிவப்பிரகாசதேசிக பரமாச்சார்ய சுவாமிகள் மேல்வருமாறு வாழ்த்தியுள்ளார்.

''ஐந்து தளங்களைக்கொண்ட சித்திரத்தேரில் 108 ஆடல்வல்லானின் சிவ தாண்டவமும் 63 நாயன்மார்களின் வரலாறுகளும், 25 மகேஸ்வரமூர்த்திகளும் சிற்பமாக இடம்பெறுவது மகிழ்ச்சிக்குரியது''



இந்து கலாசார முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன்,

''திருத்தேர் 39 அடி உயரம். நாகரவடிவத்திலுள்ளது. 6 அடி உயரங்கொண்ட நான்கு சில்லுகளும் 5 அடி உயரங்கொண்ட இரண்டு சில்லுகளும் அமைக்கப்பட்டுள்ளன. அடித்தளத்தில் 5 வரிசைகளில் விக்கிரக்கட்டைகள் பொருத்தப்பட்டுள்ளன. யாளிச்சிற்பங்கள், குதிரைச்சிற்பங்கள், அன்னப்பறவைகள், மகரப்பட்சிகள் ஆகிய சிற்பங்களால் தேரின் அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. 28 பவளக்கால்கள் தேரின் மேல் விமானத்தைத் தாங்கி நிற்கின்றன. இவற்றின் முன்பக்கத்தில் 8 அடி உயரம் கொண்ட யாளிகள் பொருத்தப்பட்டள்ளன. இத்தேரில் அமைந்திருக்கும் கொடிகள் அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைந்த தேர்ச் சீலைகள் என்பன தமிழ்நாட்டின் கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்டன. தேரின் உச்சியில் 3 அடி உயரம் கொண்ட தங்ககலசம் பொருத்தப்பட்டுள்ளது. தேரின் முன்பக்கத்தில் பிரம்மாவின் உருவத்துடன் நான்கு பெரிய குதிரைகளும் அமைக்கப்பட்டுள்ளன.''

என்று புதிய தேரின் பண்புகள் குறித்து விவரித்து விளக்கி எழுதியுள்ளார்.

இலண்டன் உயர்வாசற்குன்று முருகன் கோயில் அறங்காவலர் வி. செல்லத்துரை ''மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் அமைந்த தலம்'' என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் இடம்பெறும் முக்கிய அம்சங்கள் மேல்வருமாறு:

''1935 ஆம் ஆண்டு (காரைநகருக்கு) வேதாரணியத்திலிருந்து வந்த இசைவல்லுநர்கள் பண்ணிசை நடத்தினர். 1971ஆம் ஆண்டு திருவாதிரை நாளில் தமிழ்நாடு பிரபல நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெற்றது. அதைமுழுநாளும் பார்த்து ரசித்ததன் வேறாக மறுநாளே இலண்டன் நகருக்குச் சென்றேன். 1975 இல் இலண்டனில் சைவக்கோயில் ஆக்கும் பணியில் உயர்வாசல் குன்று முருகன் கோயில் நிர்வாகத் தலைவராக 7 ஆண்டுகள் இருந்து, ஸ்ரீ.ச.ஜெயகாந்தன் அவர்களால் உருவாக்கப்பட்ட 21 அடி உயரமான சித்திரத்தேரை ஆர்ச்வே ரஸ்தாவில் ஓடவைத்தமையும், 2002ஆம் ஆண்டு மேன்மை தங்கிய இரண்டாம் எலிசபெத் மகாராணியைக் கோயிலுக்கு வரவழைத்து வரவேற்றமையும்... இறைவா உன் நினைவோடு வாழ்ந்த வாழ்க்கையின் பலனே' என்று வியந்துள்ளமை கண்டின்புறத்தக்கது. இன்று இலண்டன் மாநகரிலே மிகப் பிரசித்தியும் கீர்த்தியும் விசேடமுமிக்க சைவத் திருத்தலமாகத் திகழ்கிறது ஆர்ச்வே உயர்வாசற் குன்று முருகன் கோயில். பெரியார் வி. செல்லத்துரை அவர்களும் காரைநகரைச் சேர்ந்தவரேயென்பதனை இக்கட்டுரையாளர் இம் மலரைப் படித்ததன் பின்பே அறிந்த கொண்டமை மகிழத்தக்கது. 2005 இல் இக்கட்டுரையாளர் இலண்டன் மாநகரில் சென்றும், சுவிஸ் மாநகர் சென்றும் ஆலயங்களிலே சொற்பொழிவு, திருமுறைப்பண்ணிசை என்பன நிகழ்த்திய போதும் இலண்டன் ஆச்வே உயர்வாசற் குன்று முருகன் கோவிலுக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டவில்லை. அப்பேறும் தவத்தாலேயே கிட்டவல்லது. முருகப்பெருமானின் திருவருள் வழிகாட்டும்.

இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிறுவனத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் திரு.நா.சீவரத்தினம் ''பெருமையும் பேரருளும்மிக்க தலம்'' என்னும் பொருளில் எழுதிய கட்டுரையில் மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கருத்துகள் வருமாறு:

''தேர் பண்டைக்காலம் முதல் தமிழர் பண்பாட்டுடன் குறிப்பிடத்தக்க தொடர்பு பெற்றுள்ளது. முல்லைக்குத் தேர்கொடுத்த பாரியைப் பண்டைய சான்றோர் போற்றிப் புகழ்ந்துள்ளனர். பத்துத் திசைகளிலும் தேரோட்டியதால் பேர் பெற்றவன் தசரதன். தேரின் மேற்பகுதி ஆகாயத்தையும், நடுப்பகுதி அண்டவெளியையும் கீழ்ப்பகுதி கீழ் ஏழு உலகத்தையும், நான்கு சக்கரங்களும் நால்வேதத்தையும் வாசுகி எனும் பாம்பு வடத்தையும் குறித்து நிற்கின்றன. கோயிலுக்குட் செல்ல இயலாத நோயாளிகள் கர்ப்பிணிகள் முதலியோர் தேரிலே வீதிவலம் வரும் உற்சவமூர்த்தியைத் தரிசித்து பயன்பெறும் வாய்ப்பினையும் இத்திருவிழா வழங்குகிறது. இதனை ஆகமங்கள் 'சாம்பவதீட்சை' என்று விதந்து கூறுகின்றன. பக்தர்கள் புத்திபலம், புகழ், உறுப்பாடு, அஞ்சாநெஞ்சு, ஆரோக்கியம், விழிப்பு, வாக்குவன்மை, ரூபலாவண்யம், சித்தத் தெளிவு, விவேகம், யோகஞானம் என்பன பெற்று நிறையுடன் வாழப்பிரார்த்திக்ககிறோம்'' என்று விவரித்துள்ளார்.

குருக்கள் ஐயா 1940 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காரைநகர் மணிவாசகர் சபையைச் சேர்ந்த தீ.க.தில்லையம்பலம் முன்னாள் அமைச்சரின் சேவையை ''மகேசன் சேவை'' என்ற பொருள்பட எழுதியுள்ளமையும் அதன் விளக்க வியாக்கினங்களும் இதம் பயப்பனவாயுள்ளன. மேற்கோட் பகுதியாகவே இங்கே எடுத்துத் தருகிறோம்.

''திரு. தி. மகேஸ்வரன் அவர்கள் செய்யும் தொண்டு 'மகேசன் சேவை' எனக் கூறலாம். தொண்டு என்பது, கைம்மாறு எதுவும் கருதாமல் செய்யும் சேவையாகும். அத்தொண்டு செய்வதற்கு எல்லோருக்கும் வாய்ப்புக் கிடையாது. திரு.மகேஸ்வரன் அவர்கள் முற்பிறப்பில் செய்த புண்ணியத்தின் பலனாகவே இப்போது அவருக்குக் கிடைத்துள்ளது. பொருள் இருந்தால் மட்டும் போதாது. இறைதொண்டு செய்வதற்கு மனமும் இறையருளும் வேண்டும்''

என்பது திரு. க. தில்லையம்பலம் அவர்களின் கருத்து.

கொழும்பு ஜெனா சிற்பக் கலைக் கூடத்தின் பிரதம ஸ்தபதி சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்கள். பிரதம ஸ்தபதியின் அரிய பேட்டி (நேர்காணல்) இம் மலரிலே இடம்பெற்றுள்ளது. கைவண்ணமிக்க சிறப்பான திருத்தேர்களை வடிவமைத்து இலண்டனிலும், சந்நிதியிலும், ஈழத்துச் சிதம்பரத்திலும் புகழ்பெற்று வாழ்கிறார் ஸ்தபதி சரவணமுத்து ஜெயகாந்தன்.

ஈழத்துச்சிதம்பரத் திருத்தலம் தொடர்பான நூல்கள் குறித்த பட்டியலொன்று (ப. 03) இடம்பெற்றுள்ளது. நூலாசிரியரின் பெயர்களுடன் உள்ளது. அப்பட்டியல்,

ஏறக்குறைய, 17 நூல்களின் பெயர்கள் மேல்வருமாறு:

1. திண்ணபுர அந்தாதி
2. திண்ணபுரத் திருப்பதிகம்
3. திண்ணபுரு ஊஞ்சல் (நாகமுத்தப்புலவர்)
4. திண்ணபுர வெண்பா
5. திண்ணபுர ஊஞ்சல் (வித்துவான் மு. சபாரத்தினஐயர்)



6. திண்ணபுர சுந்தரேசுவரர் பதிகம்
7. ஈழத்துச்சிதம்பர புராணம்
8. திருமுறை மலர்கள்
9. கும்பாபிஷேக மலர்கள்
10. திண்ணபுரத் திருச்சதகம்
11. திண்ணபுரச் சுந்தரேசுவரர் வரலாறு
12. ஈழத்துச் சிதம்பரம் வரலாற்றுச் சுருக்கம்
13. காரைநகர் திண்ணபுர மான்மியம்
14. ஈழத்துச் சிதம்பரம்
15. ஈழத்துச் சிதம்பர குறவஞ்சி
16. ஆண்டிகேணி ஐயனாரின் அற்புதவரலாறும், ஆண்டிமுனிவரின் புராணமும்
17. திண்ணபுரத் திருக்கூத்தன் திருவிளையாடல்

என்பனவாகும்.

கொழும்புத்துறை யோகசுவாமிகள் வழிபட்டதலம் ஈழத்துச் சிதம்பரம். 1924ஆம் ஆண்டு யோகசுவாமிகளின் பக்தர் காரைநகர் அஞ்சல் அலுவலக அதிபராகப் பணியாற்றியவர். ''வீடுபேறுதரும் ஈழத்துச் சிதம்பரம்'' என்னும் மகுடத்தில் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா 'வேதாகமமாமணி' பிரமஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் எழுதுவதாவது,

''காரை ஊரில் ஆறுகள் இல்லாத குறையைப் போக்கி நிற்பது அந்நாட்டு மக்களின், காரைநாட்டு மக்களின் ஒழுக்காறு என்றால் அது மிகையாகாது. ஈழத்துச் சிதம்பர ஆலய நிர்மாணப் பணிகளில் இரு எருதுகளும், இரு நாகங்களும் பெரும்பணியாற்றியதாக அறிகின்றோம். இரு எருதுகள் பொருட்களைச் சுமக்க இரு நாகங்கள் கோயில் கட்டடப்பொருள்களைக் காவல்காத்த அதிசயம் அறிகிறோம். சிதம்பர புராணப் பாடலில், இரு நாகங்கள் பற்றிய குறிப்பு மேல் வருமாறு இடம்பெற்றுள்ளது. அப்பாடல் வருமாறு:

''நீலகண்ட நாராயணனையினித்தலும்
வாலன் கூழையன் என்றி நாகம்
கோலம் கோயில் பொருட்குறு காவலாய்
சால நின்று சரித்திடும் என்பரால்''

என்றுள்ளது.

மகாவித்துவான் F.X.E. நடசாராசா ''காரைநகரில் ஒட்டிப்பிறவா இரட்டையர்கள்'' என்னும் கட்டுரையில்

''ஆண்டியும் தாமோதர ஐயரும் ஒட்டிப்பிறவா இரட்டையர்கள்'' என்றும்

''வைரவ சூலமும் ஐயனார் விக்கிரகமும் ஒட்டிப்பிறவா இரட்டையர்கள்'' என்றும்,

''அம்பலவிமுருகனும் சண்முகத்தாரும் ஒட்டிப்பிறவா இரட்டையர்கள்'' (ப. 11) எனவும் விளக்கியுள்ளார்.

ஆலயத்தின் பூர்விக வரலாற்றையும் அதனோடிணைந்த பெரியார்களையும் விவரிக்கும் பாங்கிலும், ஒப்புமையாளர்களையும், அ∴றிணை ஒப்புமை அதிசயங்களையும் துலக்கும் வகையிலும் கட்டுரை இயல்கிறது. ஆன்மிகத்தின் உயர் தத்துவங்களை நோக்குவோருக்கும், ஆலய மரபில் திளைப்போருக்கும் உகந்த பல செய்திகளையும் சிந்தனைகளையும் வழங்கும் நோக்கில் அவுஸ்திரேலியாவிலிருந்து பேராசிரியர் வே. இராமகிருஷ்ணன் ''ஈழத்துச் சிதம்பரம்'' என்னும் தலைப்பில் கட்டுரையொன்றினை எழுதியுள்ளார்.

''....சமூகத்தில் ஒழுக்கத்தை நிலைநாட்டக் குண்டாந்தடியோ துப்பாக்கியோ தேவைப்படாது. தலைவர்களுக்குத் தரப்பட்ட மதிப்பும் எத்தகைய ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து காட்டினார்கள் என்பதையே பொறுத்திருந்தது. இவ்விதமாக சமூக வாழ்க்கையை நெறிப்படுத்துவதனாலேயே கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என நாவலர் பெருமான் வலியுறுத்துவதாய் இருந்தது போலும்.'' (ப. 16) என்ற கருத்து மனதில் கொள்ளத்தக்கதே. ''மாநகரமும் கோவிலும் ரதத்தின் மகத்துவமும்'' என்னும் கட்டுரையை ஈழத்தச் சிதம்பர வேதஸ்தான குரு தற்புருஷசிவாச்சாரியார் சிவப்பிரம்மஸ்ரீ கு. காண்டீபக் குருக்கள் எழுதியுள்ளார். அறிய வேண்டிய பல தகவல்களைக் கொண்டது இக்கட்டுரை. ''1811ஆம் ஆண்டளவில் ஐயனாரைப் பிரதிஷ்டை பண்ணி வழிபட்டனர் என்று கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது. 1848இல் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர சுவாமி, சோமாஸ்கந்த பரிவார மூர்த்திகளும் பிரதிஷ்டை பண்ணப்பட்டது.

1883 இல் சோழபுரம் ஸ்தபதி ஆகிய குருசாமி என்பவரால் ஆடல் வல்லான் வடிவமைக்கப்பட்டது. 1908-04-23 இல் நடராஜர் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. 51 சுடருடன் கூடிய திருவாசியுடன் நடராஜப்பெருமானும் அவருடன் வியாக்கிரபாதர் பதஞ்சலிமுனிவர் அமைந்த திருவுருவம் இங்கு மட்டுந்தான் உள்ளது. தில்லைச் சிதம்பரத்திற் கூட இவ்வமைப்பு (வடிவம்) இல்லையென்பது குறிப்பிடத்தக்க விடயம். 400 பரப்பில் உள்ளது இவ்வாலயம். தில்லைச் சிதம்பரத்திற்குச் சமனாக ஈழத்துச் சிரம்பரத்தில் திருவாதிரை, சாந்திமகோற்சவம் நடைபெற்றுவருவது மரபு. உப்பு இடப்படாத நைவேத்தியங்கள் இக்கோவிலின் விசேட அம்சமாகும்.

''சிவாலயக் கிரியை மரபில் ரதப்பிரதிஷ்டை'' என்ற கட்டுரையைக் கிழக்குப் பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் சமஸ்கிருத விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாசநாத சர்மா எழுதியுள்ளார். இக்கட்டுரை மேல்வரும் உபதலைப்புகளைக் கொண்டமைந்துள்ளமை கவனித்தற்குரியது. உத்தரகாரணாகமத்தை அடிப்படைகாகக் கொண்ட கருத்துகள் இக்கட்டுரையிலே விளக்கப்பட்டுள்ளன.

உப தலைப்புகளாக, தேர் பற்றிய ஆரம்ப செய்திகள், சிவாலயங்களில் தேர், ரதத்தின் அமைப்பு: ரதத்தின் பிரிவு: ரதசக்கர அமைப்பு: ரதவேலைப்பாடுகள், ரதவெள்ளோட்டம், ரதப்பிரதிஷ்டைக்குரிய கிரியை முறைகள், கலசங்களில் பூஜிக்கப்படவேண்டிய தேவதைகள், ரதத்திற்குச் செய்யவேண்டிய கிரியைகள், ரத பிரதிஷ்டையின் பலன்கள், ரதப்பிரதிஷ்டையின் பிரதிகூல பயன்கள், பிராயச்சித்தம் என்பன இடம்பெறுகின்றன. சதுரவடிவமான தேர் 'நாகரம்'. எண்கோண வடிவான



தேர் 'திராவிடம்'. வட்டவடிவானது 'வேசரம். (ப. 27) என்றும் பால்கைலாசசர்மா விபரித்துள்ளார்.

1830ஆம் ஆண்டுமுதல் ஈழத்துச் சிதம்பர மார்கழித் திருவாதிரை இரதோற்சவம் இனிதே நடைபெற்று வருகின்றது. இத்தேர்த்திருவிழா 175 ஆண்டுகளாகச் சந்ததி இடையறாது நிறைவேற்றி வருவது இறைவன் திருவருளே என்ற செய்தி உபயத்தின் மகத்துவத்தை உணர்த்துவதாகும்.

''ஆடல் வல்லானின் சப்த தாண்டவங்கள் நவதாண்டவங்கள் நூற்றெட்டுத் தாண்டவங்கள்'' என்னும் கட்டுரையைத் திருவாடுதுறை ஆதீன மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் எழுதியுள்ளார். தாண்டவங்கள் பற்றியும் நூற்றெட்டுத் தாண்டவ பேதங்கள் பற்றியும் 47ஆம் பக்கந் தொடக்கம் 60ஆம் பக்கம் வரை (13 பக்கங்களில்) அரிய தகவல்களுடன் எழுதியுள்ளார். தரமும் தத்துவமுங் கொண்டமைந்த அருமையான பொருள் பொதிந்த கட்டுரை இது.

''அறுபத்துமூவர் திருநட்சத்திரங்களும் தொண்டுகளும்'' என்னும் கட்டுரையைத் திருவிடைமருதும் எஸ்.நாராயணசுவாமி எழுதியுள்ளார். நாயன்மார் பெயர், குலம், நாடு, ஊர், மூவரின் திருத்தொண்டுகளும் விவரிக்கப்பட்டுள்ளன. அறுபத்துமூவரின் ஈடுபாடுகளையும் அவர்தம் திருத்தொண்டுகளின் அடிப்படையில் மேல்வருமாறு வகைப்படுத்தியும் பாகுபடுத்தியும் உள்ளமை சைவத்திருத் தொண்டுகளை அறியவிரும்புவோருக்கும், கல்லூரிகளிலே கற்கும் மாணவர்களுக்கும், பெண்களுக்கும், இல்லத்தரசிகளுக்கும் பெரும் பயனை நல்குவதாயுள்ளது. நாயன்மார்களது திருத்தொண்டுகள் வருமாறு:

1. கோயில் தொண்டு செய்தோர்
2. பாடிப்பதம் பெற்றவர்
3. மனக்கோயில் கட்டியவர்கள்
4. மந்திரம் செபித்தவர்கள்
5. அடியார்க்குத் தொண்டு செய்தவர்கள்
6. சமணரோடு போரிட்டவர்கள்
7. கோவில் கட்டிய அடியார்கள்
8. தலங்களைத் தரிசித்தவர்களும் பாடினவர்களும்
9. சிவவேடத்திற்கு மதிப்பளித்துச் சிவனடி சேர்ந்தோர்
10. செயற்கரிய செய்தவர்கள்
11. சிவபிரானால் சோதிக்கப் பெற்றவர்கள்
12. அழுத்தமான சைப்பற்றுடையவர்கள்

என்று பாகுபாடு செய்து அவ்வந் நாயன்மார் வாழ்க்கையிற் கடைப்பிடித்தொழுகிய திருத்தொண்டுகளை நிரற்படுத்தியுள்ளமைபெரும் பயனுடையதாகும்.

இச்சிறுப்பு மலரிலே ''மார்கழி நீராடல் - பாவைக்கருத்துக்கள்'' என்னும் கட்டுரையினை உலகறிந்த 'அருள்மொழி அரசி' வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதனும் (ப. 67 - 71), ''மார்கழித் திருவெம்பாவை மகிமை'' என்னுந் தலைப்பில் 'முத்தமிழ்க் காவலர்' கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களும், ''தவநெறி''

பற்றித் திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சு.குஞ்திதபாதம் அவர்களும், 'ஒன்றியிருந்து நினைமின்கள்'' என்ற தலைப்பில் 'சித்தாந்தரத்தினம்' கலாநிதி க.கணேசலிங்கம் அவர்களும், ''இந்துமதம் - சனாதன தர்மம்'' என்னும் தலைப்பில் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் அவர்களும், ''கோமாதா குலம் காப்போம்'' என்ற விடயம் பற்றி இளவாலை 'கலாபூஷணம்' சு.செல்லத்துரை அவர்களும், ''மார்கழி மாதத்திருவெம்பாவை'' என்னும் விடயம் பற்றிக் கே.கே.சுப்பிரமணியம் அவர்களும் எழுதியுள்ளனர். தேர்வெள்ளோட்டச் சிறப்பு மலர் இத்தகு விடயச் சிறப்புடனமைவதற்கு ஆலோசனைகளை வழங்கியவர்களென அருள்மொழி அரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களும், தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் க.இரகுபரனும் ஆவார்கள். காரைநகரின் வழிவாட்டு மரபு, மக்கட்பண்பாடு, திருப்பண்கள், சமூகத் தொண்டுகள், ஈழத்துச் சிதம்பரத்ததின் எழில், ஈழத்துச்சிதம்பரத் தலத்திலன் மீதெழுந்துள்ள இலக்கியங்கள்ண. சிவபரத்துவம் என்பனவற்றை அறியவும், ஆராயவும் உதவும் வகையிலே சிற்பத்தேர் வெள்ளோட்டமலர் வெளியிடப்பட்டுள்ளது. இம்மலரின் முகப்பு அட்டைப்படமாகச் சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடராசரதும், மாணிக்கவாசக சுவாமிகளினதும், திருத்தேரினதும் திருவுருவங்கள் அழகுற இடம்பெற்றுள்ளமை பலரின் பக்தி மணத்தை மிகுவிப்பதாயுள்ளது. சைவத் தமிழன்பர்கள் (சிவசமயத்திற் பிறந்தோர்) ஒவ்வொருவரும் வாசித்தறிய வேண்டிய அரிய பல செய்திகளும் கருத்துகளும் இந்த மலரிலே இடம்பெற்றுள்ளன.

இத்தகு சிறப்பிமிக்க மலரொன்றை வெளியிட்ட 'குருபக்தசிரோமணி' கே.கே.சுபபிரமணியம் அவர்களது திருத்தொண்டுகளும், பணிகளும் தமிழ்கூறு நல்லுலகால் பாராட்டப்படத்தக்கன.

அடியார் திருத்தொண்டுகள் ஓங்குக.

சுபம்.

அன்பன்,

**வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்**

மொழித்துறை,

சப்ரகமுவ பல்கலைக்ககழகம்,

பெலிகுல்லோயா,

இலங்கை

[illegible]5-2280017

# சைவசமய
# கலைக்களஞ்சியம்

நமது அன்பிற்கும் பாராட்டுக்கும் உரித்தான பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் தெய்வச் சேக்கிழார் மனித வள மேம்பாட்டு அறக்கட்டளை சார்பாக 'சைவசமய கலைக்களஞ்சியம்' (ஒன்பது தொகுதிகள்) வெளியிடுவது மிகவும் வரவேற்புக்கும், பாராட்டுக்கும் உரியது.

கலைக்களஞ்சியத்தில் இடம்பெற விரும்பும் உங்களது பதிவுகள், கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பெரும்பணி செவ்வனே நடைபெற்று, அனைவரும் போற்றும் வகையில் ''சைவசமய கலைக் களஞ்சியம் நூலுருவாகி அனைத்து சைவர்களது கைகளிலும் தவழ்ந்து அவர்களது மனங்களிலும் இடம்பிடிக்க வேண்டுமென எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர வேதஸ்தான நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

உங்களது பதிவுகளை இந்த முகவரிக்கு அனுப்பவும்:-


**பேராசிரியர் இரா. செல்வக்கணபதி**

**(பதிப்பாசிரியர்)**

**தெய்வச் சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை,**

**H 15/2, கரிகாலன் தெரு,**

**கலாசேத்திரா காலனி,**

**பெசன்ட் நகர்,**

**சென்னை - 96**

**தொலைபேசி - 044-249-16888**